- விளம்பரப்படுத்தப்பட்ட காலியிட அறிவிப்புகள் வெளியாகும் போது அம்மையங்களில் அத்தேர்வுக்கான புதிய பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

- பயிற்சி வகுப்பிற்கு தேவையான இடம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் உயர்கல்வித் துறையால் வழங்கப்படுகிறது.
- இப்பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கான உரிய செலவினங்கள் மற்றும் மனிதவள தேவைகள் ஆகியவை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின், வேலைவாய்ப்பு பிரிவால் மேற்கொள்ளப்படுகிறது.
- மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலரால் (இளைஞர் வேலைவாய்ப்பு பணி) பயிற்சி வகுப்புகள் மற்றும் செலவினங்கள் ஆகியவை கண்காணிக்கப்பட வேண்டும்.

**<u>சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகள்:–</u>**

**<u>இந்திய விமானப்படைக்கான தொழில்நெறி வழிகாட்டும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் பேரணிகள் நடத்துதல்</u>**

இந்திய விமானப்படையில் வழங்கப்படும் பயிற்சிகள் மற்றும் பணி நியமனங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பிரத்யேக சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகள் மற்றும் பேரணிகள் நடத்தப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகளில் விமானப்படையின் மூத்த அதிகாரிகள் பங்கேற்று அம்மாணவர்களுக்கு பயிற்சியும், வேலைவாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்துகின்றனர். அனைத்து மாவட்டங்களிலும் அதிக அளவில் தமிழக இளைஞர்கள் விமானப்படையில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு ஆண்டுதோறும் சிறப்பு வேலைவாய்ப்பு விழிப்புணர்வு பேரணிகள் நடத்தப்படுகிறன. மேலும் கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்க செய்வதற்கான மாநில அரசின் ஒரு முன்மாதிரி திட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>தகுதிகள்:</u>**

- டிப்ளமோ / +2 / முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு பயிலும் கல்லூரி மாணவர்கள் விமானப்படையில் சேர்வதற்கு சரியான நேரத்தில் ஊக்கப்படுத்தப்படுவதால் இவ்வேலைவாய்ப்புக்கு தேர்வு செய்யப்படுகின்றனர்.
- ஐஹகு–ல் விமானியாக பணிபுரிய 10–ஆம் வகுப்பு / 12–ஆம் வகுப்பு படித்திருத்தல் வேண்டும்.
- மொத்த மதிப்பெண்ணில் 50ளூ மற்றும் ஆங்கிலத்தில் குறைந்தபட்சம் 50ளூ மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- வயது வரம்பு 17 – 21 க்குள் இருத்தல் வேண்டும்.

**<u>தன்னார்வ பயிலும் வட்டங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு நடத்தப்படும் சிறப்புப் பயிற்சி வகுப்புகள்:–</u>**

அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் செயல்படும் தன்னார்வ பயிலும் வட்டங்கள் மூலம் மாற்றுத்திறனாளி பதிவுதாரர்களுக்கு அரசுத் துறையில் வேலைவாய்ப்பு பெறும் வகையில் கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கான சிறப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மேலும், இப்போட்டித்தேர்வுகளை எதிர்கொள்ளும் செவிப்புலன் இழந்த மாற்றுத்திறனாளிகளுக்கு சைகை மொழிபெயர்ப்பாளர்களைக் கொண்டும், பார்வை இழந்த மாற்றுத்திறனாளிகளுக்கு ப்ரெய்லி வழியாகவும் பயிற்சி வகுப்புகள் நடத்த சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**<u>திருநங்கைகளுக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்:–</u>**

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் திருநங்கைகளுக்கு சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகளில் தன்னார்வ பயிலும் வட்டத்தால் நடத்தப்படும் போட்டித்தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் போன்ற பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான மெய்நிகர் கற்றல் வலைதளம், தனியார் துறை வேலை இணையம் போன்ற இவ்வலைதளங்களில் பதிவு செய்தல், திறன் பயிற்சிகள், உயர்கல்விக்கான பல்வேறு உதவித் தொகைகள், அரசு சிறப்பு திட்டங்கள் போன்றவைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

மேலும், சுய வேலைவாய்ப்புக்கு ஊக்குவித்தல், சுய உதவிக் குழுக்கள், பல்வேறு அரசு நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் மூலம் அதற்கான கடனுதவி பெறும் வழிவகைகள் குறித்தும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இந்நிகழ்ச்சி ஒவ்வொரு அலுவலகத்திலும் ஆண்டிற்கு ஒரு முறை நடத்தப்படுகிறது.

**<u>பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதி மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டல்</u>**

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் உதவியுடன், பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கி பயிலும் 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி மாணவர்கள் பயனடையும் வகையில் சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**<u>தொழில்நெறி வழிகாட்டும் கையேடுகளை வெளியிடுதல்:–</u>**

துறையின் செயல்பாடுகள் மற்றும் பல்வேறு தொழில் வாய்ப்புகள் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தும் ‘திறன் தமிழகம்’ என்னும் செய்தி இதழ் நவம்பர் 2016 முதல் ஒவ்வொரு காலாண்டிலும் துறையின் வேலைவாய்ப்பு பிரிவால் வெளியிடப்பட்டு வருகிறது.

- "10 ஆம் வகுப்புக்குப் பிறகு என்ன ?"
- "12 ஆம் வகுப்புக்குப் பிறகு என்ன ?"
- "ஐ.டி.ஐ. க்குப் பிறகு என்ன ?"
- பாலிடெக்னிக்கிற்கு பிறகு என்ன ?’’

- முதல்தர உயர்கல்வி நிறுவனங்கள் வழங்கும் முதுநிலை பட்ட படிப்புகள் மற்றும் முதுநிலை பட்டய படிப்புகள் – ஒரு பார்வை

என்ற தலைப்புகளில் புத்தகங்கள் வெளியிடப்பட்டு அவை துறையின் வலைதளத்தில் (www.tnvelaivaaippu.gov.in) வெளியிடப்பட்டுள்ளன.

**<u>தொழில்நெறி மற்றும் திறன் விழிப்புணர்வு வாரம்:–</u>**

அரசாணை நிலை எண்.6, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(ஆர்1) துறை, நாள்.18.01.2018–ன் படி ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் இரண்டாம் வாரம் மற்றும் ஜூலை 15–ஆம் நாள் முறையே தொழில்நெறி மற்றும் திறன் விழிப்புணர்வு வாரமாகவும், திறன் நாளாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, அனைத்து மாவட்டங்களிலும்

- தொழில்நெறி ஆலோசனைகள்
- தொழில்நெறி உரைகள்
- தொழில்நெறி கண்காட்சிகள்
- தொழில்நெறி கருத்தரங்குகள்
- தொழில்நெறி விழிப்புணர்வு பேரணிகள்
- நடமாடும் ஊர்திகள் மூலம் தொழில்நெறி விழிப்புணர்வு
- ஆசிரியர்களுக்கான முதன்மை தொழில்நெறி வழிகாட்டியாளர் பயிற்சிகள் நடத்துதல்
- தொழில்கள் வேலைவாய்ப்பு மற்றும் உயர்கல்வி குறித்த சிற்றேடுகள், மற்றும் கையேடுகள் விநியோகித்தல்
- மாணவர்களுக்கான திறன் போட்டிகள்

**<u>‘ஒரு நாள் – ஒரு செயல்பாடு’</u>**

அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் வாலாய பணிகளுடன் அந்நாளிற்காக ஒதுக்கப்பட்ட பணிகளும் கூடுதல் கவனம் செலுத்தப்படுகின்றன. அனைத்து செயல்பாடுகளையும் முறைப்படுத்தும் விதமாக, வாரத்தின் ஐந்து வேலை நாட்களிலும் ‘ஒரு நாள் – ஒரு செயல்பாடு’ என்னும் செயல்முறைக் கருத்து பின்வருமாறு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

| நாளுக்கான செயல்முறைக் கருத்து | அந்நாளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் |
|---|---|
| திறன்மிகு திங்கள் (திங்கள்) | • திறன் முகாம்<br>• திறன் மதிப்பீடு மற்றும் திறன் பயிற்சிக்காக பதிவு செய்தல் |
| சேவை செவ்வாய் | • தொழில்நெறி வழிகாட்டல்<br>• தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகள் |

| | |
|---|---|
| (செவ்வாய்) | • கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள்<br>• ஆசிரியர்களுக்கான முதன்மை தொழில்நெறி வழிகாட்டியாளர் பயிற்சிகள் |
| போட்டித்தேர்வு புதன்<br>(புதன்) | • போட்டித்தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்துதல்<br>• மாதிரி தேர்வுகள் மற்றும் மாதிரி நேர்காணல்கள் நடத்துதல் |
| விழிப்புணர்வு வியாழன்<br>(வியாழன்) | • குழு விவாதங்கள், தனிநபர் வழிகாட்டல் மற்றும் உளவியல் ஆய்வுகள். |
| வேலைவாய்ப்பு வெள்ளி<br>(வெள்ளி) | • அனைத்து பதிவுதாரர்களுக்கும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல்<br>• புதிய வேலைவாய்ப்புகள், காலி பணியிடங்கள், வேலைநாடுநர்கள் மற்றும் வேலையளிப்போர் விவரங்களை புதுப்பித்தல். |

அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் தற்போது ‘ஒரு நாள் – ஒரு செயல்’ என்ற கருத்தம்சத்தைப் பின்பற்றுவதால், தொழில்நெறி வழிகாட்டுதல் குறித்த அனைத்து செயல்பாடுகளும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**<u>திறன்மிகு திங்கள்:–</u>**

**<u>நோக்கம்:–</u>**

வேலைநாடுநர்களின் திறன் மற்றும் தகுதிக்கேற்ப அவர்களை மதிப்பீடு செய்து வேலைவாய்ப்பு பெறுவதற்கு உதவியாக, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மூலம் உரிய பயிற்சி பெற அவர்களை பதிவு செய்யவும் அந்நிறுவனம் வழங்கும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் மற்றும் வெளிநாடுகளில் பெறக்கூடிய வேலைவாய்ப்புகள் குறித்தும் விழிப்புணர்வு அளித்தல்.

**செயல்பாடுகள்:–**

- திறன் முகாம்
- திறன் மதிப்பீடு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
- திறன் பயிற்சி மற்றும் அயல்நாட்டு வேலைவாய்ப்பு பதிவு ஆகியவை அதற்குரிய பிரிவுகளின் மூலம் மேற்கொள்ளுதல்
- தொழில்நெறி மற்றும் திறன் விழிப்புணர்வு வாரத்தின் போது இளைஞர்களுக்கு திறன் ஊர்திகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
- வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
- திறன் பயிற்சிக்காக பதிவு செய்தவர்களுக்கு திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
- திறன் மதிப்பீடு சோதனைகள்

- முன்கற்ற திறனை அங்கீகரித்து சான்று வழங்குதல்
- திறன் இடைவெளி ஆய்வு

**<u>சேவை செவ்வாய்:–</u>**

**<u>நோக்கம்:–</u>**

வெளிமுகமை நிகழ்ச்சிகள் நடத்தி மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்களிடையே கல்வி, பயிற்சி வகுப்புகள், உயர்கல்வி மற்றும் புதிய வேலைவாய்ப்புகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

**செயல்பாடுகள்:–**

- பள்ளி / கல்லூரிகளில் வாழ்க்கை தொழில்நெறி வழிகாட்டுதல்.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தொழில்நெறி வழிகாட்டுதல்.
- தன்னம்பிக்கை ஊட்டும் நிகழ்ச்சிகள்
- விடுதிகளில் தங்கி பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகள்.
- 10–வது மற்றும் 12–வது தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகள்
- தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல்
- பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி பேராசியர்களுக்கான முதன்மை தொழில்நெறி வழிகாட்டியாளர் நிகழ்ச்சிகள்
- பல்வேறு துறையைச் சார்ந்த வெற்றியாளர்களைக் கொண்டு பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டும் உரைகள் வழங்குதல்.

**<u>போட்டித்தேர்வு புதன்:–</u>**

**<u>நோக்கம்:–</u>**

போட்டித்தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்குதல் மற்றும் கட்டணமில்லா பயிற்சி வகுப்புகளில் சேர்த்தல். மாதிரித் தேர்வுகள் மற்றும் மாதிரி நேர்காணல்கள் நடத்துதல் மூலம் போட்டியாளர்களுக்கு உரிய அரசு வேலை கிடைக்க உதவுதல்.

**செயல்பாடுகள்:–**

- போட்டித்தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்துதல்
- மாதிரித் தேர்வுகள் / மாதிரி நேர்காணல்கள் நடத்துதல்
- எதிர்வரும் போட்டித்தேர்வுகள் குறித்த விழிப்புணர்வு

- போட்டித் தேர்வு குறித்த கையேடுகள் மற்றும் தன்னார்வ பயிலும் வட்ட மாணவர்களின் வெற்றி கதைகளை வெளியிடுதல்.
- போட்டித் தேர்வுகளுக்கான பாடக்குறிப்புகளை தயார் செய்து தன்னார்வ பயிலும் வட்ட மாணவர்களுக்கு வழங்குதல்
- பல்வேறு போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற வெற்றியாளர்களைக் கொண்டு தன்னார்வ பயிலும் வட்ட மாணவர்களுக்கு ஊக்கமூட்டும் உரைகள் வழங்குதல்
- தன்னார்வ பயிலும் வட்ட வெற்றி பெற்ற மாணவர்களின் வெற்றிக் கதைகள் ஒலி / ஒளி பதிவுகளாக பயிற்சி வகுப்புகளின் போது ஒளிப்பரப்பப்படுகின்றன.

**<u>விழிப்புணர்வு வியாழன்:–</u>**

**<u>நோக்கம்:–</u>**

பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவதன் மூலம் வேலைநாடுநர்கள் சுய தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கும், தங்களை சுய மதிப்பீடு செய்து கொள்வதற்கும், தனக்கான சரியான வாழ்க்கை தொழிலை தேர்வு செய்வதற்கும் வழிவகை செய்தல்.

**செயல்பாடுகள்:–**

- வேலைவாய்ப்பு பதிவின் போது மனுதாரர்களுக்கு உரிய வழிகாட்டுதல்கள்
- குழு விவாதங்கள் நடத்துதல்
- தனிநபர் வழிகாட்டல்
- தொழில்நெறி வழிகாட்டுதல் பற்றிய சிற்றேடுகள் வழங்குதல்
- பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கான முதன்மை தொழில்நெறி வழிகாட்டியாளர் நிகழ்ச்சிகள்
- உளவியல் பகுப்பாய்வு சோதனைகள் மேற்கொள்ளுதல்.
- சுய தொழில் மேற்கொள்ள ஊக்குவித்தல்
- சிறப்பு பிரிவு பதிவுதாரர்களுக்கு வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள்.

**<u>தொழில்முறை வழிகாட்டுதல்:—</u>**

தொழில்முறை வழிகாட்டுதல் என்பது தனிநபருக்கு ஏற்ற தொழில் திட்டமிடல் மற்றும் தொழில் வாய்ப்புகளில் உள்ள பிரச்சனைகளை தீர்வு செய்வதற்காக உதவுதல் என்பதாகும்.

**<u>தொழில்நெறி வழிகாட்டுதல்:—</u>**

அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களாக மறுசீரமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இம்மையம் இளைஞர்களுக்கு வழிகாட்டுதல் மூலம், அவர்களின் வேலைவாய்ப்பு மற்றும் செயல்திறனை அதிகரிக்கும் நோக்கில் மாற்றப்பட்டன.

இதன் முக்கிய நோக்கம் தொழில்நெறி வழிகாட்டுதல், தொழில்நெறி ஆலோசனை வழங்குதல், திறன் மதிப்பீடு போன்ற செயல்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் மாணவர்கள் மற்றும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சரியான வேலைவாய்ப்பை தேர்ந்தெடுக்க உதவுதல் ஆகும்.

அரசாணை எண்.132—ன் படி மாறுப்பட்ட இச்சூழ்நிலையில் திருவள்ளுர், திருவண்ணாமலை, திருப்பூர், நாமக்கல், தர்மபுரி, ஊட்டி, அரியலூர், பெரம்பலூர், கரூர், நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், திருவாரூர் மற்றும் தேனி உள்ளிட்ட 15 மாவட்டங்களில் பணிகளை விரிவுபடுத்தும் நோக்கில் புதிதாக தொழில்நெறி வழிகாட்டும் அலகுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டங்களான செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், மயிலாடுதுறை, தென்காசி ஆகிய மாவட்டங்களிலும் தொழில்நெறி வழிகாட்டும் அலகுகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

**<u>மெய்நிகர் கற்றல் வலைதளம் – போட்டித் தேர்வுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கான பிரத்யேக தளம்</u>**

அரசு போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் கிராமப்புற மாணவர்கள் தாங்கள் இருக்கும் இடத்திலிருந்தே போட்டித் தேர்வுகளுக்கு தயாராவதற்காக பிரத்யேக மெய்நிகர் கற்றல் வலைதளம் (**https://tamilnaducareerservices.tn.gov.in**) தொடங்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் வேலைவாய்ப்பு பிரிவால் மெய்நிகர் கற்றல் வலைதளமானது அமைக்கப்பட வேண்டும் என அரசாணை நிலை எண்.32, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஆர்1) துறை, நாள். 08.03.2017–ன் படி **22.02.2019** அன்று துவக்கி வைக்கப்பட்டது. இணையவழியாக மாணவர்கள் போட்டித் தேர்வுகளுக்கு தயாராவதற்கு இம்மெய்நிகர் கற்றல் வலைதளம் உதவுகிறது.

எழுத்தர் முதல் அலுவலர் பதவிகளுக்கான பல்வேறு தேர்வு முகமைகளால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்களுக்கு உதவும் வகையில் மென்பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வுகள், ஒலி மற்றும் ஒளி பாடக்குறிப்புகள், தேர்வு பாடத்திட்டங்கள், நடப்பு நிகழ்வுகள், குழு விவாதங்கள் மற்றும் இதர தொடர்புடைய பாடக்குறிப்புகள் ஆகியவற்றை இவ்வலைதளம் உள்ளடக்கியுள்ளது. இவ்வலைதளத்தில் இடம் பெற்றுள்ள மென்பாடக்குறிப்புகளை பதிவுதாரர்கள் பதிவிறக்கம் செய்து எப்பொழுது வேண்டுமானாலும் படித்துக் கொள்ளலாம். இவ்வலைதளம் அலைபேசி செயலியை உள்ளடக்கியதாக உள்ளதால் அலைபேசி பயன்பாட்டாளர்களுக்கு பயன்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

TNPSC (Group I, II & IV / VAO), Group VIIB/VIII, SSC, IBPS, RRB மற்றும் பல்வேறு வங்கித் தேர்வுகளுக்கான பாடக்குறிப்புகள் இவ்வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதர மென்பாடக்குறிப்புகள் தயார் செய்யப்பட்டு தொடர்ந்து பதிவேற்றம் செய்யப்படுகிறது.

**<u>தன்னார்வ பயிலும் வட்ட புத்தக கொள்முதல் குழு :–</u>**

அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களின் தன்னார்வ பயிலும் வட்டங்களில் தரம் மேம்படுத்தப்பட்ட நூலகங்கள் உள்ளன. இந்நூலகங்களில் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான (TNPSC, TNUSRB, IBPS, SSC RRB, GATE, CAT, NEET, TANCET, NET/SLET., etc.,), புத்தகங்கள் உள்ளன. மேலும், குறிப்பு புத்தகங்கள், வாராந்திர, மாதாந்திர பத்திரிக்கைகள், தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் சமச்சீர் புத்தகங்கள் மற்றும் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலின் (NCERT) புத்தகங்களும் உள்ளன.

அரசாணை நிலை எண்.125, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(ஆர்2) துறை, நாள்.21.07.2017 –ன் படி தன்னார்வ பயிலும் வட்டங்களுக்கு தேவையான புத்தகங்களை கொள்முதல் செய்ய மாநில அளவில் ‘‘புத்தக கொள்முதல் குழு’’ ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 6 மாதங்களுக்கு ஒரு முறை இக்குழு கூடி தேவையான புத்தகங்கள் மற்றும் தினசரி, வாராந்திர, மாதாந்திர இதழ்கள் கொள்முதல் செய்வதை இறுதி செய்கிறது. இக்குழு உறுப்பினர்களின் பரிந்துரையின் அடிப்படையில் நூலகத்திற்கு தேவையான புத்தகங்கள் மற்றும் இதரப் பொருள்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

இக்குழுவில் துறைசாரா உறுப்பினர்களாக பொது நூலக இயக்குநரகம், கல்லூரி கல்வி இயக்குநரகம் மற்றும் அனைத்திந்திய குடிமைப்பணிகள் பயிற்சி மையம் போன்றவற்றின் உறுப்பினர்களாக உள்ளனர். அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் செயல்படும் தன்னார்வ பயிலும் வட்ட நிதியிலிருந்து புத்தகக் கொள்முதலுக்கான செலவீனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்கள் இலவசமாக இவ்வனைத்து வசதிகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் செயல்பாடுகள்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் கீழ் சென்னையில் இயங்கும் மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம், 2019ம் ஆண்டு துவங்கப்பட்டு வேலைநாடும் இளைஞர்களுக்கு தேவையான தகவல்களை உரிய முறையில் வழங்கி மேம்பட்ட வாழ்க்கைத் தொழிலை தெரிவு செய்வதில் அவர்களுக்கு உதவிடும் நோக்கில் செயல்படுகிறது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநர் அவர்கள் இம்மையத்தின் முதன்மை நிர்வாக அலுவலராவார்.

### 1. வழிகாட்டுதல் ஆலோசனை மற்றும் உள அளவை மதிப்பீடு

- மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பயிற்சி பெற்ற சிறப்பு வல்லுநர்களை கொண்டு ஆலோசனை வழங்கப்படுகிறது.
- இவ்வாலோசனை வழங்குதலின் நோக்கம் தனிநபருடைய கருத்துகளை ஒழுங்குப்படுத்தி அவர்கள் எண்ணியவாறு தொழில்நெறியை தேர்வு செய்ய உதவுவதாகும்.
- தற்போது மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் ஆலோசர்களால் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு தேவையான குழு வழிகாட்டுதல்கள் மற்றும் ஆலோசனை வழங்கப்படுகின்றன. தேவைக்கேற்ப தனிநபர்களுக்கு உள அளவை சோதனை நடத்தப்பட்டு ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றது.
- 72 கொள்குறி வினாக்களை கொண்ட இத்தேர்வானது 45நிமிடம் நடைபெறும் ஒன்றாகும். இத்தேர்விலிருந்து பெறப்படும் அறிக்கையை ஆய்வு செய்து தனிநபரின் பண்பு, பலம், பலவீனம் மற்றும் உள்ளார்ந்த விருப்பம் இவற்றின் அடிப்படையில் மனுதாரர்களுக்கு உரிய தொழில்நெறி ஆலோசனையானது வழங்கப்படுகின்றது.

### 2. போட்டி தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள்

- தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், மத்திய அரசுப்பணியாளர் தேர்வு வாரியம், வங்கிப்பணியாளர்கள் தேர்வு முகமை உள்ளிட்ட பல்வேறு போட்டி தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
- இப்பயிற்சி வகுப்புகளானது அனுபவம் மற்றும் தகுதியுடைய பாட வல்லுநர்கள் மூலம் நடத்தப் பெறுகின்றன.

- இங்கு பயிலும் மாணவர்களுக்கு நடப்பு நிகழ்வுகள் மற்றும் தகவல் சார்ந்த பாடக்குறிப்புகள் வழங்கப்படுவதுடன் சிறப்பு மாதிரி தேர்வுகளும் நடத்தப்படுகின்றன.
- பார்வை திறனற்ற மாற்றுத்திறனாளிகளும் பயன்பெறும் வண்ணம் பாடப்புத்தகங்கள் ஒலிநாடாக்களாக பதிவு செய்து வழங்கப்படுகின்றன.

**3. பிரத்யேக தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்**

- பல்வேறு வகையான கல்வித் தகுதிகளை கொண்ட அனைத்து இளைஞர்களும் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு துறை சார்ந்த நிறுவனங்களை தொடர்பு கொண்டு அவர்களின் தேவைகள், எதிர்பார்ப்புகள் மற்றும் காலிப்பணியிடங்களின் விவரங்கள் பெறப்பட்டு அந்தந்த கல்வித்தகுதி உடைய மனுதாரர்களுக்காக பிரத்யேக வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பெறுகின்றன.
- மேலும் வேலைநாடும் இளைஞர்களின் வயது மற்றும் விருப்பங்கள் உள்ளடங்கி சுய விவரகுறிப்புகள் தனி தரவுகளாக பாதுகாக்கப்படுகின்றன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தகவல்கள் வேலைவாய்ப்பு முகாமின் போதும் உரிய தனியார்துறை நிறுவனங்கள் கோரும்போதும் பயன்படுத்தப்படுகின்றன.

**4. சிறப்பு கருத்தரங்குகள்**

- தமிழகத்தில் உள்ள மாணவர்கள் / இளைஞர்கள் பயன்பெறும் வகையில் இணையம் வழியாகவும் நேரடியாகவும் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.
- இக்கருத்தரங்குகள் வளர்ந்து வரும் துறைகள் மற்றும் அதில் இருக்க கூடிய தொழில் வாய்ப்புகள், உயர் கல்வி மற்றும் மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கான சிறப்பு கருத்தரங்குகள் மற்றும் சுய முன்னேற்றம் சார்ந்த தலைப்புகளில் அனுபவம் கொண்ட நிபுணர்களை கொண்டு நடத்தப்படுகின்றன.

இவ்வாறு, இளைஞர்கள் தங்களுக்கான தொழிலை தெரிவு செய்து வளமாக வாழ்வதற்குத் தேவையான பல்வேறு சேவைகளை மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம் வழங்கி வருகின்றது.

**Employment Market Information Section**

**Private Sector Placement - Job Fairs:**

In an effort to provide for the growing demand of employment in Private Sectors, District Level Private Sector Placement Assistance Cells have been set up in all the 32 District Employment and Career Guidance Centres with an objective to enhance and promote placement of job seekers in private sector. The District Employment and Career Guidance Centres play the role of organizing job fairs for enabling the meeting between job seekers and employers thereby providing a platform for both of them to satisfy their respective requirements.

Micro job fairs are conducted in the premises of the Office every Friday. Over and above the weekly job fair, Mega Job Fair are also conducted in various venues, making the employers and job seekers meet and select suitable candidates. These Job Fairs play a pivotal role and help the employer to choose the best candidates and the job seekers to secure a decent job. The job fair also enables the non-selected candidates to identify their skill gap and to take up necessary skill training to enhance their ability.

The Employment and Training Department as facilitator ensures maximum participation of Employers in these job fairs which plays a vital role in providing private sector placements for various job seekers with different academic background. From 2018, as part of the "An Activity – A Day", an unique initiative every Friday has been designated as 'Velaivaaippu Velli' focusing on Private Sector Job Fairs.

Government have sanctioned **Rs.1.28 crore** per annum towards conducting job fairs vide to **G.O. No.208** Labour and Employment (R1) Department dated 04.11.2019 at **Rs.1.00 lakh per quarter** to each DECGC.

**Tamil Nadu Private Job Portal**

The Tamil Nadu Private Job Portal with URL https://www.tnprivatejobs.tn.gov.in developed by the Employment Wing and launched by the Hon'ble Chief Minister of Tamil Nadu on 16th of June 2020. The aim of the portal is to serve as a platform to integrate and match the job aspirations of the youth with the manpower needs of the industry by connecting Employers and Job seekers. All Employers including Micro, Small, Medium

Enterprises and large scale industries can register and select the manpower as per their requirements, likewise the job seekers can also select the employers as per their expectation such as range of salary / area of work / qualification and desire.

Tamil Nadu Private Jobs offer bilingual registration option (English and Tamil) for the candidates. The platform is currently free for both employers and job seekers.

Various industry associations have also been informed about the facilities available in the portal 'www.tnprivatejobs.tn.gov.in'. Regular Employer meet is also conducted by the District Collector on the request of the District Officers to register and post their vacancies in this portal.

Field Officers are also co-ordinating with employers who need man power immediately in large numbers and mobilizing job seekers as required by the employer from the portal.

The vacancies for Apprenticeship posted in the Portal are also communicated to the Training Wing for the benefit of ITI students. This portal also helps mitigate the skill gap and study the skill requirements and enables study of Demand and Supply of Manpower and Shortage Occupations. The portal enables extracting of data on Sector wise vacancy / Job Role Sectors / Salary wise job posted for ascertaining the Labour Market Information.

## Staff Training Section:

1. **மாவட்டம் விட்டு மாவட்டம் பதிவு மாற்றம் – மா.வே.சு 03/2020**

வேலைவாய்ப்பு அலுவலக பதிவினை மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்றுவதற்கு வட்டாட்சியர் அளவில் வழங்கப்படும் குடும்ப குடிப்பெயர்ச்சி சான்றிதழ் வட்டாட்சியர் அளவில் வழங்கப்படும் இருப்பிடச் சான்றிதழ், குடும்ப அடையாள அட்டை (அல்லது) ஆதார் அட்டை (அல்லது) நிலையான கணக்கு அட்டை (அல்லது) வாக்காளர் அடையாள அட்டை (அல்லது) கடவுச் சீட்டு (அல்லது) ஓட்டுநர் உரிமம் (அல்லது) முன்னாள் படை வீரர்களுக்கான அடையாள அட்டை (அல்லது) மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டை இவைகளில் ஏதாவது ஒன்றினை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் என்ற நடைமுறை அமலில் இருந்தது.

அரசாணை நிலை எண் 66, தொ.ம.வே(என்2)த் துறை, நாள் 15.07.2002

அரசாணை நிலை எண் 7, தொ.ம.வே(ட்டி2)த் துறை, நாள்.02.02.2009

அரசாணை நிலை எண் 244, தொ.ம.வே(ட்டி2)த் துறை, நாள்09.12.2016

ஆனால், தற்போது வேலைவாய்ப்பு அலுவலக பதிவினை மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்றுவதற்கு குடும்ப அடையாள அட்டை (அல்லது) ஆதார் அட்டை (அல்லது) வாக்காளர் அடையாள அட்டை (அல்லது) கடவுச் சீட்டு (அல்லது) ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு ஆவணத்தை மட்டும் சமர்ப்பித்தால் போதும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண் 185, தொ.ம.வே.துறை, நாள்16.11.2020

2. **மறுசீரமைப்பு – மா.வே.சு 06/2019**

சென்னையில் செயல்பட்டு வரும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில்நுட்பம் ) சென்னை–32 மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் திறனற்றோருக்கானது) சென்னை – 4 ஆகிய இரு அலுவலகங்கள் சென்னை–4–ல் செயல்பட்டு வரும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும மையத்துடன் இணைத்து வேலைவாய்ப்புத் துறை மறுசீரமைப்பின் போது ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண் 132 தொ.ம.வே(என்1) துறை நாள் 30.07.2019

3. **பரிந்துரை பட்டியல் – மா.வே.சு 08/2019**

வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் பரிந்துரை பட்டியலில் செல்லுபடி காலமான ஆறு மாத காலத்திலிருந்து, மேலும் ஆறு மாத காலத்திற்கு நீட்டித்து வழங்குவதற்கு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை தலைமைக்கு அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் பரிந்துரை பட்டியலில் செல்லுபடி காலமான ஆறு மாத காலத்திலிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக ஆறு மாத காலம் நீட்டித்து ஆணைகள் வழங்க துறைத் தலைவர் அவர்களுக்கு பின்வருமாறு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

1. தேர்வுக்குழு என்று ஒன்று இருந்து அது கூடாதிருத்தல்
2. அரசின் தெளிவுரை, முடிவினை எதிர்நோக்கி நிலுவையில் இருத்தல்
3. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருத்தல்

4. பட்டியலின் செல்லுபடிகாலத்திற்குள் தேர்வு நடவடிக்கையினை தொடங்கியிருந்து செல்லுபடி காலம் முடிவடைவதற்குள் தேர்வு நடவடிக்கையினை முடிக்க இயலாதிருத்தல்

அரசாணை (நிலை)எண் 6, தொ.ம.வே.துறை, நாள் 23.01.1996–ல் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரை பட்டியலின் செல்லுபடி காலம் முடிவடையும் தேதியிலிருந்து நீட்டிப்பு வழங்க வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையருக்கு உள்ள அதிகாரம் ஆறு மாதம் என்று இருப்பதை ஓராண்டு காலமாக நீட்டித்து அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை)எண் 190, தொ.ம.வே(ட்டி2)துறை, நாள் 10.10.2019

**4. மூன்றாம் பாலினர் – மா.வே.சு 02/2018**

மூன்றாம் பாலினருக்கு வேலைவாய்ப்புகளில் ஒதுக்கீடு மற்றும் சாதியினை உறுதி செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண் 90, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் (SW8(2)) துறை நாள் 22.12.2017

**5. மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள் – மா.வே.சு 06/2018**

மாற்றுத் திறனாளிகளுக்கான சேவைகளை மேம்படுத்தும் வகையில் சிறப்பு பிரிவுகள் நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பூர், கரூர், அரியலூர், பெரம்பலூர், திருவாரூர், சிவகங்கை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, விழுப்புரம், திருவண்ணாமலை, திண்டுக்கல், இராமநாதபுரம், தேனி, விருதுநகர் மற்றும் திருவள்ளூர் ஆகிய 18 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் புதியதாக தோற்றுவிக்கப்பட்டு அதன் செயல்பாடுகள் மற்றும் பணியாளர்களின் பணி தொடர்பான அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

அரசாணை (நிலை) எண் 168, தொ.ம.வே(ஆர்2) துறை, நாள் 20.11.2018

**6. தேசிய தொழில்நெறி வழிகாட்டி மைய இணையதளத்தில் உள்ளீடு – மா.வே.சு 03/2017**

அரசு, பொதுத்துறை மற்றும் உள்ளாட்சித்துறை அலுவலகங்களில் பூர்த்தி செய்யப்படவுள்ள பணிக்காலியிட விவரங்கள் அனைத்தும் செய்தித்தாள்களின் வழி விளம்பரம் அளித்து பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதோடு அப்பணிகாலியிடங்களின் விவரங்களை தேசிய தொழில்நெறி வழிகாட்டி மைய இணையதளத்திலும் (www.ncs.gov.in) உள்ளீடு செய்ய வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 73, தொ.ம.வே.(ஆர்1) துறை நாள் 19.04.2017

**7. ஒருங்கிணைந்த ஐந்து ஆண்டு பட்டபடிப்பு பதிவு – மா.வே.சு 04/2017**

ஐந்து ஆண்டு பாடத்திட்டத்தில் 3 ஆண்டுகள் முடிந்த நிலையில் இளநிலை பாடத்திற்குரிய பாடதிட்டங்கள் 3 ஆண்டுகள் நடத்தப்பட்டு 3 ஆண்டுகள் முடிந்த நிலையில் இளநிலை தகுதிக்கு பிரத்யேக சான்றிதழ் வழங்கப்படும் நிலையில் இளங்கலை பட்டப்படிப்பை பதிவு செய்தல்.

1. இயக்கக கடித எண்.ப.ப1/17015/2014, நாள்.16.03.2016.
2. உறுப்பினர் செயலர்(பொ) தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம், சென்னை–5 அவர்களின் கடித எண்.421/2016, நாள்.24.03.2017.

**8. மாற்றுத்திறனாளிகளுக்கு 4% இட ஒதுக்கீடு – மா.வே.சு 05/2017**

மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு மற்றும் அரசு சார்ந்த பணி நியமனங்களில் வழங்கப்பட்டு வந்த 3% இட ஒதுக்கீட்டினை 4% ஆக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அரசாணை (நிலை) எண் 21. மாற்றுத்திறனாளிகள் நல(மா.தி.ந–3.2) துறை, நாள் 30.05.2017

**9. மாற்றுதிறனாளிகள் பரிந்துரை – மா.வே.சு 03/2016**

மாற்றுத்திறனாளிகளுக்கு பொருத்தமுள்ள குரூப் ‘‘ஏ’’ மற்றும் குரூப் ‘‘பி’’ பதவிகளுக்கான பணிக்காலியிடங்கள் பெறப்படும் நேர்வுகளில் உள்ள விபரங்களை கருத்தில் கொண்டு மாற்றுதிறனாளிகள் பரிந்துரை செய்யப்பட வேண்டும்.

அரசாணை நிலை எண் 13, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள் 02.03.2016

**10. தமிழ்வழி படித்தவர்களுக்கு முன்னுரிமை – மா.வே.சு 05/2016**

தமிழ்வழியில் படித்தோருக்கு வழங்கப்பட்டு வரும் முன்னுரிமை தொடர்பான கல்வித் தகுதி குறித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு இடைக்கால தடை வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண். 145, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள் 30.09.2010

**11. முன்னாள் மாணவர்களுக்கான (Inmates and Ex-Inmates) முன்னுரிமை பதிவு – மா.வே.சு 09/2016**

முன்னாள் மாணவர்களுக்கான (Inmates and Ex-Inmates) முன்னுரிமை பதிவுதாரர் பட்டியல் மற்றும் தெளிவுரை (குரூப் ‘‘சி’’ மற்றும் குரூப் ‘‘டி’’ பதவிகளுக்கான பணிக்காலியிடங்கள் தொடர்பாக)

அரசாணை (நிலை) எண் 57, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் (SW8(2)) துறை நாள் 20.07.2016

**12. தாய்/தந்தை இழந்த நபர்களுக்கு முன்னுரிமை – மா.வே.சு 03/2015**

அனாதை இல்லங்களில் சேர முடியாத தாய்/தந்தையற்ற நபர்கள் வருவாய் கோட்டாட்சியர் அளவில் வழங்கப்படும் சான்றிதழ் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பது திருத்தப்பட்டு வருவாய் வட்டாட்சியர் அளவில் வழங்கப்படும் சான்றிதழ் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண். 1053, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் 17.06.1977.

**13. ஆதரவற்ற விதவைகளுக்கான முன்னுரிமை – மா.வே.சு 01/2014**

மாநில அரசுச் சார்பு நிறுவனங்கள் மற்றும் வாரியங்கள் ஆகியவற்றின் மூலமாக வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு முன்னுரிமையுடையவருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டு அறிவிக்கப்படும் காலியிடங்களுக்கு ஆதரவற்ற விதவைகளையும் முன்னுரிமைப் பட்டியலின் வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் (Order of Priority) பரிந்துரை செய்யலாம்.

அரசாணை (நிலை) எண் 229, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள் 07.04.1988

**14. மூன்றாம் பாலினம் பணிக்காலியிடம் பரிந்துரை– மா.வே.சு 03/2014**

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் மூன்றாவது பாலினம் என்ற பாலினத்தின் கீழ் பதிவு செய்யும் நபர்களை பெண்கள் பிரிவிற்கு என ஒதுக்கீடு செய்யப்படும் பணியிடங்களுக்கான காலியிடங்களுக்கும், மேலும் பொது பிரிவிற்கென (ஆண்/பெண் இருபாலரும்) ஒதுக்கீடு செய்யப்படும் பணிக்காலியிடங்களுக்கும் பரிந்துரை செய்யலாம் என ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளதால், வருங்காலங்களில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் மூன்றாம் பாலினத்தின் கீழ் பதிவு செய்துள்ளவர்களை அரசாணையில் வழங்கப்பட்டுள்ள ஆணைகளின்படி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பெறப்படும் பணிக்காலியிடங்களுக்கு பரிந்துரை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 127, தொ.ம.வே(ட்டி2)த் துறை நாள் 27.10.2014

**15. பொது விதி 12(d)–ன் கீழ் வயதுச் சலுகை அளித்தல் – மா.வே.சு 07/2013**

பொது விதி 12(d)–ன் கீழ் வயதுச் சலுகை பொருந்தும் என்பதுக்குரிய அரசாணை / சிறப்பு விதிகளின் நகலை வேலை அளிப்பவர்கள் அளிக்காத நிலையில், அக்குறிப்பிட்ட பணிக்காலியிடங்களுக்கு பொது விதி 12(d)–ன் கீழ் வயதுச் சலுகை வழங்கப்பட வேண்டியதில்லை எனவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை (எம்.எஸ்) எண். 149, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 03.08.2000.

**16. மாற்றுத் திறனாளிகள் முன்னுரிமை – மா.வே.சு 01/2012**

மாநில அரசுத் துறைக்காக ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள முன்னுரிமைப் பட்டியலின் தொகுதி IV–ல் உள்ள இனம் VI –க்கு அடுத்ததாக இனம் – VII என்ற புதிய இனத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகள் முன்னுரிமையுடையவராகக் கருதப்பட வேண்டுமென திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண். 149, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்(கே) துறை, நாள் 11.11.2011

**17. ஆள் இன்மைச் சான்று – மா.வே.சு 08/2012**

அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் பணிக்காலியிடங்களுக்கான ஆள் இன்மைச் சான்று அனுப்புவதற்கு, தகுதி வாய்ந்த பதிவுதாரர்கள் இல்லை எனும் நேர்வுகளில் மட்டுமே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடங்களுக்கு ஆள் இன்மைச் சான்று வழங்கப்பட வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**18. மாற்றுத் திறனாளிகளுக்கு குடும்ப அட்டை சமர்ப்பிப்பதிலிருந்து விலக்களித்தல் – மா.வே.சு 09/2012**

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்தல் மற்றும் பதிவினை ஒரு மாவட்டத்திலிருந்து வேறொரு மாவட்டத்திற்கு மாற்றுதல் போன்ற நிகழ்வுகளின்போது அனைத்து வகை மாற்றுத் திறனாளிக்கும் குடும்ப அட்டை சமர்ப்பிப்பதிலிருந்து விலக்களித்து மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையை ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆவணமாகக் கொண்டு வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்யலாம் என்றும், உடல் ஊனத்தின் தன்மை 40%–க்கும் குறையாமல் இருக்கும் மாற்றுத் திறனாளிகளை மருத்துவக் குழுவால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டையின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் மாற்றுத் திறனாளிகளாக பதிவு செய்யலாம் எனவும் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண். 168, தொ.ம.வே(ட்டி2)த் துறை, நாள் 07.12.2012

**19. அருந்ததியினருக்கு இடஒதுக்கீடு ஆணைகள் கூடுதல் அறிவுரைகள் – மா.வே.சு 11/2010**

அருந்ததியினர் இனத்தவருக்கென பணிக்காலியிடங்கள் அறிவிக்கப்படும்போது உயிர்ப்பதிவேட்டில் உள்ள தகுதியான அருந்ததியர்களைப் பரிந்துரைக்க வேண்டும். அருந்ததியருக்கென தனியே Cut Off Seniority–ஐ பின்பற்ற வேண்டும். உயிர்ப் பதிவேட்டில் தகுதி / விருப்பமுள்ள அருந்ததியர்கள் இல்லையெனில் முன்னுரிமை காலியிடமாக இருந்தாலும் முன்னுரிமை அல்லாதோருக்கான இடமாகயிருந்தாலும் மாநில அளவில் சுற்றுக்கு அதே இனத்தவரைப் பரிந்துரைக்க வேண்டும்.

அரசாணை (நிலை) எண் 50, ஆ.ம.ப.ந.துறை நாள். 29.04.2009

அரசாணை (நிலை) எண். 142, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்(கே) துறை, நாள் 14.06.2009

**20. உறுப்புநலன் குன்றியவர்கள் புதுப்பித்தல் செய்வதிலிருந்து விலக்களித்தல் – மா.வே.சு 16/2010**

மாற்றுதிறனாளிகளான கண்பார்வையற்றோர், செவிப்புலன்இழந்தோர் மற்றும் வாய் பேசாகோர் ஆகியோர் தங்களது எண்ணங்களை வெளிப்படுத்துவதில் உள்ள சிரமங்களையும் அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை உரிய காலத்தில் புதுப்பிப்பதிலுள்ள பிரச்சனைகளை கருத்தில் கொண்டு வேலைவாய்ப்பு அலுவலக பதிவு புதுப்பித்தல் செய்வதிலிருந்து விலக்களிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அரசாணை (நிலை) எண் 167, தொ.ம.வே(ட்டி2).துறை நாள். 01.09.2010

**21. 18 மாத புதுப்பித்தல் சலுகை – மா.வே.சு 17/2010**

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 10 ஆண்டுகளுக்கு மேல் உயிர்ப்பதிவேட்டில் காத்திருக்கும் பதிவுதாரர்கள் 18 மாதங்களில் வேலைவாய்ப்பு அலுவலகத்தை தொடர்பு கொண்டோ அல்லது விண்ணப்பித்தாலோ மருத்துவச் சான்றிதழின்றி ஒருமுறை புதுப்பித்தல் சலுகை வழங்கலாம்.

அரசாணை (நிலை) எண் 66, தொ.ம.வே.துறை நாள் 05.05.1995

10 ஆண்டுகளுக்குள் உயிர்ப்பதிவில் காத்திருக்கும் பதிவர்களுக்கும் 18 மாத புதுப்பித்தல் சலுகை நீட்டிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 66, தொ.ம.வே.துறை நாள் 02.09.1996

18 மாத புதுப்பித்தல் சலுகையினை எத்தனை முறை கோரினாலும் அனுமதிக்கலாம் என்று அரசு முடிவு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 168, தொ.ம.வே.துறை நாள் 01.09.2010

**22. கிறிஸ்துவ இனத்தவர்க்கு 3.5% இட ஒதுக்கீடு விலக்கிக்கொள்ளப்பட்டது – மா.வே.சு 06/2009**

பிற்படுத்தப்பட்ட கிறிஸ்துவர் மற்றும் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் இனத்தை சேர்ந்தவர்களுக்கு தலா 3.5% அரசு பணி நியமனங்களில் இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. தற்போது பிற்படுத்தப்பட்ட கிறிஸ்துவர்களுக்கு வழங்கப்பட்ட 3.5 % இட ஒதுக்கீடு விலக்கிக் கொள்ளப்பட்ட நிலையில் திருத்திய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதனில் 200 புள்ளிகள் கொண்ட திருத்தப்பட்ட சுழற்சி பட்டியல் வெளியிடப்பட்டுள்ளன.

அரசாணை எண். 206, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 06.11.2008

**REGISTRATION**

| S.No | SEECM NO | SUBJECT | DETAILS | PDF LINK |
|---|---|---|---|---|
| 1 | 16/2010 | Registration | People with Disability (organ disablity) - exception from employment renewal - Reg | https://drive.google.com/file/d/1pwkgFreqPHxsWPKc1tBSOrAJSHlqBSSv/preview |
| 2 | 17/2010 | Registration | Details about Special Renewal of 18 months completed registration card - Reg | https://drive.google.com/file/d/13a-yL_SnwjAZYFTTK_fF08uh9NQjpyZQ/preview |
| 3 | 9/2012 | Registration | Registration for PH - excemption from Family Card - Reg | https://drive.google.com/file/d/1tzodXrYjKi7IF_fe4ma7yZLybEdiploX/preview |
| 4 | 3/2014 | Registration | Issuing order of Third Gender registration is eligible for the vacancy reserved for Women and General category - Reg | https://drive.google.com/file/d/1XABrnkAWjFnDw22puLKrvbLAJUn-fjay/preview |
| 5 | 4/2017 | Registration | Issuing order related to registration of five years Combined Graduate Courses in employment office - Reg | https://drive.google.com/file/d/1NHCcZJ1Q8wzh9DlU0-TU8Yd-6tWstm1v/preview |
| 6 | 5/2017 | Registration | Detailed explanation about the 4% reservation of Differently Abled person who seeking for govt jobs - Reg | https://drive.google.com/file/d/1695jSA4ilt1rD0jaxKO5PZ5mgDoS9bhJ/preview |
| 7 | 3/2020 | Registration | Issueing order about registration transfer of index card from one District to District - Reg | https://drive.google.com/file/d/1PhLqZmLZc-FxLh1CPVSjcOnAtzyFe2pY/preview |

**VACANCY**

| S.No | SEECM NO | SUBJECT | DETAILS | PDF LINK |
|---|---|---|---|---|
| 1 | 8/2012 | Vacancy | Circulation of vacancies in respect of SC/STs to the Coaching cum Guidance Centre before sending non availability certificates to the Govt - Reg | https://drive.google.com/file/d/16LbHHec5eSRifVUk5w-8drw_ktM825c1/preview |
| 2 | 7/2013 | Vacancy | Rule 12(d) applicable for the Technical Diploma vacancy - Reg | https://drive.google.com/file/d/1X1UnDLdOzj3f7by5yrCWMPg_Uxkd1FcR/preview |
| 3 | 3/2016 | Vacancy | Identification of suitable post for Differently Abled persons under Group A & B categories -Reg | https://drive.google.com/file/d/1iav3OXT2pUpJ5GYIN8dn7IzEuxVeAL-D/preview |
| 4 | 5/2016 | Vacancy | Detailed explanation of Govt Job seekers who studied in Tamil Medium is to be eligible in the Prority list - Reg | https://drive.google.com/file/d/1rN6SM_xDtgdSyTdSn9ss9xDHhaO66kGf/preview |
| 5 | 8/2019 | Vacancy | Extend Revalidation period of the Selected Candiate list - Reg | https://drive.google.com/file/d/19IlJgC6R6VKWn6P8QBSQKjqUBCGsWprV/view |

**PRIORITY**

| S.No | SEECM NO | SUBJECT | DETAILS | PDF LINK |
|---|---|---|---|---|
| 1 | 1/2012 | Priority | Order of priority correction in State Govt Departments - Reg | https://drive.google.com/file/d/10LmjjWWNwN-9EmRoAVjUg4Dt2tgHZLiR/preview |
| 2 | 1/2014 | Priority | Priority for Destitute Widows - assigning of amendment to GO.No. 188 - Reg | https://drive.google.com/file/d/1B-ht-zeITgMn5Os0ZS9PzBNhDGUIhXWw/preview |
| 3 | 3/2015 | Priority | Orphan - Certificate issuing authority (RDO - Revenue Tahsildar) - Reg | https://drive.google.com/file/d/1ZXUWTNnIr5XntQMuiY_U_zCDEI15qf3u/preview |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | 9/2016 | Priority | Recruitment of Inmates and Ex-Inmates of observation homes, special homes, children homes, after care organisation functioning under the department of social defence - Reg | https://drive.google.com/file/d/114H_vCLlj3mT47pxFuaOPVZJdY32J4f2/preview |

**RESERVATION**

| S.No | SEECM NO | SUBJECT | DETAILS | PDF LINK |
|---|---|---|---|---|
| 1 | 6/2009 | Reservation | Issuing Registration withdraw of BC (CHRISTRIAN) community - Reg | https://drive.google.com/file/d/1UYwUfBM2_n34CSL6Cg2-QD8CJJUO3_xE/preview |
| 2 | 11/2010 | Reservation | SCA - Additional explanation about SCA reservation - Reg | https://drive.google.com/file/d/14oTYlXzHYqnj_dkEbdSujxaSKYCyJOV0/preview |
| 3 | 2/2018 | Reservation | Determination of the community and reservation for Third Gender - Reg | https://drive.google.com/file/d/1EVrov7bxW0a6Fj0HjA5S55xuE9Rd3RCN/preview |

**ADMINISTRATION**

| S.No | SEECM NO | SUBJECT | DETAILS | PDF LINK |
|---|---|---|---|---|
| 1 | 6/2018 | Administration | Created special cell of Differently Abled person in 18 districts - Reg | https://drive.google.com/file/d/129fQN7A875UXzEZB5fB4yLs6YZDIIdUm/preview |
| 2 | 6/2019 | Administration | Rewamping the offices of DEO(G) chennai and DEO (US) chennai - Reg | https://drive.google.com/file/d/1C0RnGvsseglAQdfafguO4-lFfv9U4D9A/preview |
| 3 | 3/2017 | Administration | Issued Orders about the State/Central Govt vacancy details to be entered in National Career Service Portal | https://drive.google.com/file/d/1_gExNTxIsHBAq4rcv-zIlD3XpnL3I-OW/view |

**Unemployment Assistance Scheme Section**

## UNEMPLOYMENT ASSISTANCE SCHEME

With a view to mitigate the hardships faced by the Unemployed youth, who are without a job for many years, a scheme to distribute unemployment assistance, the Unemployment Assistance Scheme was formally announced in G.O.Ms.No.72, Labour and Employment (R2) Department. Dated: 25.08.2006, to SSLC, HSC and Degree completed Registrants. There after the Scheme was extended to SSLC failed registrants vide G.O.No.215, Labour and Employment (R2) Department dated: 25.10.2010. **Conditions to avail Assistance:**

- Family income should not be more than Rs.72,000/- per annum.
- The Registrants should not be a bonafied student of any School / College.
- The Registrants should not be employed in Government / Private or Self Employed.
- The Registrants should get a Consolidated Certificate from the Revenue Inspector for the above conditions.
- The maximum age limit is 40 years for others and 45 years for SC/ST.
- The Registrants should have been registered with Employment Office for a continuous period of five years or more.
- The Registrants should open a Savings Bank Account with the Nationalised Banks.

**Assistance Details:**

- SSLC failed Rs.100/-per month.
- SSLC passed Rs.150/-per month.
- HSC passed Rs.200/-per month.
- Degree / Post Degree passed Rs.300/-per month.

However, the quantum of allowance has been enhanced for all Unemployed youth persons vide G.O.(Ms)No.19, Labour and Employment (R2) Department, dated 20.02.2017.

| Sl.No. | Educational Qualification | Enhanced Unemployment Assistance Amount |
|---|---|---|
| 1. | SSLC Failed | Rs.200/- |
| 2. | SSLC Passed | Rs.300/- |
| 3. | HSC Passed | Rs.400/- |
| 4. | Degree / Post Degree passed | Rs.600/- |

**Assistance Period:**

- The Beneficiaries will be permitted to receive the Assistance for a continious period of three years subject to age limit and placement whichever happens earlier.
- The Beneficiaries to receive the assistance, should submit a self declaration as to unemployment at the beginning of second and third year.

List of Eligible beneficiaries is prepared at the beginning of every Quarter and bill presented to the District Treasury / P.A.O Offices and the Assistance is sanctioned and disbursed through the beneficiaries' Savings Accounts in Nationalised Banks.

Eligible Registrants will have to approach the District Employment Office of their District and get the application, free of cost. The filled application should be submitted with enclosures mentioned in the application at the same office to avail the assistance.

## வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகைத் திட்டம்

படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தும் எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் காத்திருக்கும் இளைஞர்களின் துயர் துடைக்கும் வகையில், அரசாணை (நிலை) எண். 72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஆர்.2.) துறை, நாள் 25.8.2006 வாயிலாக, மாநிலத்தில் உள்ள எஸ்.எஸ்.எல்.சி, மேல்நிலைக் கல்வி மற்றும் பட்டதாரி கல்வித் தகுதியுடைய பதிவுதாரர்களுக்கு உதவும் வகையில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டமானது அரசாணை நிலை எண்.215 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(R2) துறை, நாள்.25.10.2010 வாயிலாக பள்ளியிறுதி வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெறாத பதிவுதாரர்களுக்கும் நீட்டிக்கப்பட்டது.

### இத்திட்டத்தின் கீழ் உதவி பெற நிபந்தனைகள் :

(1) குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/–க்குள் இருத்தல் வேண்டும்.

(2) கல்வி நிறுவனங்களில் நேரடியாக கல்வி பயில்பவராக இருத்தல் கூடாது.

(3) எந்த ஒரு நிறுவனத்திலும் பணிபுரிபவராக இருத்தல் கூடாது.

(4) மேலே வரிசை எண் ஒன்று முதல் மூன்று வரை கூறப்பட்ட தகுதிகளை குறிப்பிட்டு வருவாய் அலுவலரிடம் ஒருங்கிணைந்த சான்றிதழ் பெற வேண்டும்.

(5) தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பதிவுதாரர்கள் 45 வயதிற்குள்ளும், இதர பதிவுதாரர்கள் 40 வயதிற்குள் இருத்தல் வேண்டும்.

(6) பதிவுதாரர் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்கு நிறைவு பெற்றவராக இருத்தல் வேண்டும்.

(7) பதிவுதாரரின் பெயரில் தேசீய மயமாக்கப்பட்ட வங்கியில் சேமிப்பு கணக்கு துவக்கி, வங்கிக் கணக்கு எண்ணை சமர்ப்பிக்க வேண்டும்.

### உதவித்தொகை விவரம்:-

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை விவரம் பின்வருமாறு:–

**(1)** பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ. 100/–

**(2)** பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ. 150/–

**(3)** மேல் நிலை கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ. 200/–

**(4)** பட்ட / முதுநிலை பட்ட படிப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ. 300/–

தற்போது இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித்தொகையானது அரசாணை (நிலை) எண்.19, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஆர்.2) துறை, நாள்.20.02.2017–ன்படி கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

| வ.எண். | கல்வித்தகுதி | தற்போது உயர்த்தி வழங்கப்படும் உதவித்தொகை |
|---|---|---|
| 1 | பத்தாம் வகுப்பு தோல்வி | ரூ.200/– |
| 2 | பத்தாம் வகுப்புத் தேர்ச்சி | ரூ.300/– |
| 3 | மேல்நிலைக் கல்வித் தேர்ச்சி | ரூ.400/– |
| 4 | பட்டப்படிப்பு/ பட்ட மேற்படிப்பு | ரூ.600/– |

**<u>உதவித்தொகை வழங்கும் காலம்:-</u>**

1) வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு வயதுவரம்பு மற்றும் பணி நியமனத்திற்குட்பட்டு, 3 வருட காலத்திற்கு உதவித்தொகை வழங்கப்படும்.
2) உதவித்தொகை பெறும் பயனாளிகள், உதவித்தொகை பெற்று ஓராண்டு முடிந்த பின்னர் அதாவது 4 காலாண்டுகள் உதவித்தொகை பெற்றபின் 2வது ஆண்டு துவக்கத்திலும் 3வது ஆண்டு துவக்கத்திலும் உதவித்தொகை பெறும் தகுதிகளை உறுதிபடுத்தும் சுய உறுதி ஆவணம் அளிக்க வேண்டும்.

**<u>உதவித்தொகை வழங்கும் முறை</u>**

இத்திட்டத்தின்படி, வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற தகுதியுள்ள பயனாளிகளுக்கு ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் பட்டியல்கள் தயார் செய்யப்பட்டு, மாவட்ட கருவூலம் / சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அதன் வாயிலாக பயனானிகளின் வங்கிக் கணக்குகளுக்கு உதவித்தொகை அனுப்பப்பட்டு பயனாளிகளின் சேமிப்பு கணக்கில் வரவு வைக்கப்படும்.

அரசாணை எண்.147, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஆர்2) துறை, நாள். 31.08.2017–இன்படி, வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் பயனாளிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்து, அவர்களது வேலை பெறும் திறனை அதிகப்படுத்தி வேலைவாய்ப்பு உருவாக்குதல் தொடர்பாக சிறப்பு திறன் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

## UNEMPLOYMENT ASSISTANCE SCHEME FOR DIFFERENTLY ABLED PERSONS

When Unemployment Assistance Scheme for able-bodied persons was formally announced in G.O.(MS)72, Labour and Employment(R2) Department Dated:25.08.2006, it covered all the Differently Abled Persons also, (except visually handicapped) and they were given the same quantum of allowance as normal candidates (i.e) Rs.100/- per month for SSLC Failed persons, Rs.150/-per month for SSLC Qualified persons, Rs.200/-per month for HSC Holders and Rs.300/-per month for Degree Holders.

However, the quantum of allowance has been enhanced for all Differently Abled persons vide G.O.(Ms)No.113, Social Welfare and Nutritious Meals Scheme Department, dated:22.08.2008 on par with blind beneficiaries, who have been given Rs.300/-per month for SSLC qualification and below, Rs.375/-per month for HSC qualification and Rs.450/-per month for Degree qualification.

Now, the quantum of allowance has been again enhanced for all Differently Abled persons vide G.O.(Ms)No.21, Differently Abled Welfare (Ma.Thi.Na.3) Department dated:23.03.2015 on par with blind beneficiaries, who have been given Rs.600/-per month for SSLC qualification and below, Rs.750/-per month for HSC qualification and Rs.1000/-per month for Degree qualification. As per G.O.Ms.No.43, Social Welfare and Nutritious Meals Scheme Department dated:24.02.2010, the fund was allotted for the Unemployment Assistance Scheme for Differently Abled Persons and the scheme was implemented from 01.01.2010.

Subsequently the Unemployment Relief Scheme for visually handicapped persons and Unemployment Relief Scheme for other Differently Abled Persons were

merged into common scheme as per G.O.Ms.No.63. Differently Abled Welfare (Ma.Thi.Na.2.2) Department Dated:11.11.2011 under one Head of Account.

**CONDITIONS TO AVAIL ASSISTANCE:**

1. The Applicant should have waited in the Live Register of the Employment Exchange for a period of not less than one year.
2. Total parental Income limit has been removed vide G.O.31, Differently Abled Welfare Department, dated:26.06.2010.
3. The Registrants should not be a bonafide student of any School / College.
4. The Registrants should not be employed in Government / Private or Self Employed.
5. The registrants above 45 years should not avail Differently abled pension (PHP).
6. The Registrants should submit a self declaration for the above conditions.
7. The Registrants should open a Savings Bank Account with the Nationalised Banks.

Unemployment beneficiaries get their unemployment allowance every quarter through saving bank account by way of ECS(Electronics Clearing System).

Government in G.O.(Ms).No.01, Differently Abled Welfare (Ma.Thi.Na.2.1) Department, dated 31.01.2017, have replaced the condition of prescribly upper age limit of 40 years (45 years for SC/ST) for applicant applying under this scheme, by orderly that the unemployment assistance be sanctioned to applicant, without the condition of upper age limit, for 10 years or till they get employment whichever is earlier and also prescribed a condition in respect of applicant who are above 45 years should submitted self affidavit they are not receiving Differently Abled Pension (PHP).

**<u>அனைத்துவகை மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பற்றோர் நிவாரண உதவித்தொகை வழங்கும் திட்டம் :</u>**

அரசாணை எண்.72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஆர்2) துறை, நாள் 25.08.2006– இன்படியான வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகளுக்கும் (பார்வையற்றோர் நீங்கலாக) இதர பதிவுதாரர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்று உதவித்தொகை வழங்கப்பட்டு வந்தது, (உ.ம்) பள்ளியிறுதி தவறியோருக்கு ரூ.100/–, பள்ளியிறுதித் தேர்ச்சி மாதம் ரூ.150/–, மேனிலைத் தேர்ச்சி மாதம் ரூ.200/–, பட்டதாரிகள் மாதம் ரூ.300/–.

எனினும், அரசாணை எண்.113, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள், 22.08.2008 மற்றும் பார்வையற்றோருக்கான நிவாரணத் திட்டத்தின் கீழ் பார்வையற்ற பயனாளிகளுக்கு வழங்கப்படுவதைப் போன்று அனைத்துவகை மாற்றுத் திறனாளிகளுக்கும் பள்ளியிறுதித் தேர்ச்சி மற்றும் அதற்கு கீழ் மாதம் ஒன்றுக்கு ரூ.300/– வீதமும் மேனிலைக் கல்வித் தகுதி தேர்ச்சிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.375/– வீதமும், பட்டதாரிகளுக்கு மாதமொன்றுக்கு ரூ,450/–வீதமும் வழங்கப்பட்டு வருகிறது.

அரசாணை எண்.21 மாற்றுத்திறனாளிகள்(மாதி .ந–3) நலத்துறை நாள்.23.03.2015–ன்படி அனைத்துவகை மாற்றுத் திறனாளிகளுக்கும் பள்ளியிறுதித் தேர்ச்சி மற்றும் அதற்கு கீழ் மாதம் ஒன்றுக்கு ரூ.600/– வீதமும் மேனிலைக் கல்வித் தகுதி தேர்ச்சிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.750/– வீதமும், பட்டதாரிகளுக்கு மாதமொன்றுக்கு ரூ.1000/–வீதமும் உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதிஒதுக்கீடு அரசாணை எண்.43 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நாள்.24.02.2010–ன்படி வழங்கப்பட்டு 01.01.2010 முதல் துவங்கும் காலாண்டு முதல் வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அரசாணை நிலை எண்.63, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள்.11.11.2011ன்படி பார்வையற்றோருக்கான வேலைவாய்ப்பற்ற உதவித்தொகை வழங்கும் திட்டமானது மற்ற வகை மாற்றுத்திறனாளிகளுக்கும் வழங்கப்படும் வேலைவாய்ப்பற்ற உதவித்தொகை திட்டத்துடன் இணைக்கப்பட்டு அனைத்துவகை மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பற்றோர் உதவிதொகை வழங்கும் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாற்றுத்திறனாளிகள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்:–**

1. விண்ணப்பதாரர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்து ஓராண்டு நிறைவு பெற்றவராக இருத்தல் வேண்டும்.
2. பெற்றோரின் ஆண்டு வருமான உச்சவரம்பு அரசாணை எண்.31 மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள்.26.06.2010–இன்படி முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளது.
3. விண்ணப்பதாரர் தனது பள்ளி அல்லது கல்லூரிக் கல்வியினை முழுவதுமாக தமிழ்நாட்டிலேயே முடித்திருக்க வேண்டும் அல்லது பெற்றோர்/பாதுகாவலர் குறைந்த பட்சம் 15 ஆண்டு காலம் தமிழ்நாட்டிலேயே குடியிருந்தவராக இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரர் பள்ளி / கல்லூரி சென்று பயிலும் மாணவராக இருத்தல் கூடாது.
5. இத்திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகள் ஒவ்வொரு ஆண்டும் தாம் எந்த வேலையிலோ அல்லது சுயவேலையிலோ ஈடுபடவில்லை என சுய உறுதிமொழி ஆவணம் சமர்பித்தல் வேண்டும்.

இப்பயனாளிகளுக்கு உதவித்தொகை ஒவ்வொரு காலாண்டும் உதவித்தொகை கணக்கிடப்பட்டு, அவர்களின் சேமிப்பு வங்கிக் கணக்கில் காசோலை / ECS மூலம் வழங்கப்படுகிறது.

அரசாணை எண்.147, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஆர்2) துறை, நாள்.31.08.2017–இன்படி, வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் பயனாளிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்து, அவர்களது வேலை பெறும் திறனை அதிகப்படுத்தி வேலைவாய்ப்பு உருவாக்குதல் தொடர்பாக சிறப்பு திறன் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**Thittam and Velaivaippu Section**

1. **Special Cells for Differently Abled Persons**

An exclusive Special Employment Office for the Differently-Abled persons is functioning at the Integrated Employment Office Campus at Guindy, Chennai and special cells for differently abled were functioning in 13 district employment offices. Based on the announcements of the Hon'ble Minister for Labour during the Budget Session 2017-18 Special Cells for the Differently-Abled persons have been constituted in 18 districts vide G.O Ms No 168, Labour and Employment Department Dated 20.11.2018 and are functioning from 3.12.2018.Presently the special cells for the Differently-Abled is functioning in all the districts with an objective to serve the Differently-Abled persons and provide special assistance to them for employment.

**2. Coaching – cum – Guidance Centers for SC/ST.**

Coaching-cum-Guidance Centres have been established in Coimbatore, Tiruchirapalli, Tirunelveli and Vellore, vide G.O.Ms No 727 Adi Dravidar and Tribal Welfare department dated 26.12.1988 and in Cuddalore vide G.O Ms No 188, Adi Dravidar and Tribal Welfare department dated 13.08.1993 with considerable population of Scheduled Castes / Scheduled Tribes. These Centers cater to the needs of Scheduled Castes / Scheduled Tribes youth by providing them Career Guidance and Coaching for Competitive Examinations. They provide Career Guidance, Confidence Building Programmes and Counselling Services to youth from SC and ST communities. These Centres also provide training to improve the abilities for employment and career prospects of the Scheduled Caste and Schedule Tribe candidates appearing for various competitive examinations and motivate them for Self-employment. The Government have sanctioned a sum of Rs.20.46 lakhs per annum for carrying out the above activities to the five Coaching cum Guidance Centres vide G.O Ms No 10, Labour and Employment Department Dated 24.01.2017

### 3. Special Vocational Guidance Centre for Tribal Population

A Special Vocational Guidance Centre for Tribal Population was established at Udhagamandalam vide G.O Ms No 80, Social Welfare Department, dated 04.02.1980 and the office started functioning with effect from 06.03.1980. with a mandate to create awareness on various careers, higher educational opportunities, competitive examinations and self-employment in remote parts of the District. Activities of this centre are 1. Providing career guidance for tribal population 2. Bringing out career information bulletin 3. Delivering career talks at tribal hostels and schools 4. Providing group guidance and individual guidance 5.Providing individual information 6. Registering the tribal candidates of remote areas for employment

### 4. Model Career Centers in Tamil Nadu:

In the year 2014 two Model Career Centers were established in the District Employment and Career Guidance Centres at Coimbatore and Vellore under the Mission Mode Project of the National Career Services with the financial aid provided by the Government of India. The Centres function with an objective to provide maximum job opportunities to the registrants of the employment offices and other job seekers and provide the youth with Career Guidance. The Model Career Centres provide Career Guidance in a transparent and effective manner with the help of latest technology and modern facilities available for counselling and training.

The Ministry of Labour & Employment, New Delhi has given approval for establishing seven additional Model Career Centres at Salem, Ramanathapuram, Tiruvallur, Udhagamandalam, Villupuram, Virudhunagar and Madurai with financial aid of Rs.49.50 Lakh per centre.

### 5. National Career Service Portal:

All the District Employment and Career Guidance Centres under National Career Service are integrated through National Career Service Portal {https://www.ncs.gov.in}. Online registration of job seekers, employers and skill training providers help the job seekers to get placement at national level. This portal acts as a platform to bridge the employment gap between the Government, job seeker, employers and skill providers.

### 6. Cell for Overseas Employment Guidance and Skill Registration

As per the Government Order (G.O.(Ms No 192, Labour and Employment(R1) Department Dated 07.10.2016) a cell for overseas employment guidance and skill registration was set up in all employment offices to assist the candidates who are in need of overseas employment and skill training. The junior employment officer shall carry out the guidance activity and Skill Registration.

### 7. TAMIL NADU SKILL DEVELOPMENT CORPORATION

Tamil Nadu Skill Development Corporation (TNSDC) was established by Government of Tamil Nadu as a not-for-profit public limited Company incorporated under Section 8 of the Companies Act, 2013 to meet the growing demand of skilled workforce and to transform the State into the skill capital of the country.

TNSDC is the nodal agency for skill related training and aims to catalyze the skill development eco-system in the State. It actively collaborates with Government Agencies, reputed private skill training institutions and industry partners to impart industry oriented and placement linked skill training.

#### 7.1 TNSDC PORTAL

The Web Portal of TNSDC (www.tnskill.tn.gov.in) has been upgraded into multilingual skill analytics platform integrating the various stake holders.

TNSDC portal will act as a centralized skill registry repository for the entire state benefitting potential employers as well as the trained youths.

#### 7.2 HIGH END SKILL TRAINING

High end skill training for engineering and polytechnic Graduates is being imparted by establishing a Centre of Excellence (CoE) and 5 Technical Skill Development Institutes in the State (t-SDIs) under Public Private Partnership (PPP) mode with an outlay of Rs.546.84 Crore.

Under this scheme, Government have established a Centre of Excellence at MIT, Chromepet, Chennai as well as the following five linked technical Skill Development Institutes (t-SDIs).

1) Anna University College, Kancheepuram
2) Anna University College, Villupuram
3) Thanthai Periyar Government Institute of Technology, Vellore
4) Central Polytechnic College, Taramani
5) Murugappa Polytechnic College (Aided), Avadi

MIT, Chennai serves as the main centre to provide skill training to improve the employability of the students and also impart industry relevant training for up-skilling the faculty of ITI's and Polytechnics.

### 7.3 RECOGNITION OF PRIOR LEARNING (RPL)

Recognition of Prior Learning, commonly known as RPL refers to an assessment process used to evaluate and certify a person's existing skill sets, knowledge and experience gained either by formal, non-formal or informal learning. TNSDC has certified under RPL in the following sectors

1) Construction
2) Apparel
3) Paints & Coating
4) Leather
5) Logistics
6) Automobile
7) Tourism & Hospitality
8) Domestic Workers

The State Government have also given directions to engage skill certified workers in all the contract works undertaken by departments like PWD, CMWSSB, local bodies, etc., for ensuring quality of work and to also minimise accidents at work spot.

**திட்டம் மற்றும் வேலைவாய்ப்பு பிரிவு**

**1. மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள்:**

சென்னை, கிண்டியிலுள்ள ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் இயங்கி வருகிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 2017–18–ஆம் ஆண்டின் வரவு செலவு கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டவாறு மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள் 18 மாவட்டங்களில்,(அரசாணை நிலை எண் 168 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள் 20.11.2018) 03.12.2018 முதல் உருவாக்கப்பட்டன. தற்போது 32 மாவட்டங்களிலும் செயல்படும் மாற்றுத்திறனாளிகளுக்கானசிறப்பு பிரிவுகள் மாற்றுத்திறனாளிகள் வேலைபெறும் வகையில் சேவைகள் மற்றும் சிறப்பு உதவிகள் வழங்கும் குறிக்கோளுடன் இயங்கி வருகின்றன.

**2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிகமாக உள்ள கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு மாவட்டங்களில் அரசாணை நிலை எண் 727, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 26.12.1998 வாயிலாகவும் மற்றும் வேலூர் மாவட்டத்தில் அரசாணை நிலை எண்188, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 13.081993, வாயிலாகவும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தொழில் நெறி வழிகாட்டும் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இம்மையங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்குத் தேவையான தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் போட்டித்தேர்வுகளுக்கு பயிற்சி அளித்தல் போன்ற சேவைகளை அளித்து வருகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு தொழில் நெறி வழிகாட்டுதலுடன், தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகள் மற்றும் உரிய ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

இம்மையங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வேலைவாய்ப்பு பெறுவதற்கு உரிய திறமைகளை மேம்படுத்தும் வகையில் பயிற்சிகள் வழங்குவதுடன் அவர்களது வாழ்க்கை தரத்தினை உயர்த்திடும் வகையில் பல்வேறு போட்டித் தேர்வுகளில் பங்கேற்கவும், சுய வேலைவாய்ப்பில் ஈடுபட ஊக்குவிக்கவும் வழிவகை செய்கின்றன. இப்பணிகளை மேற்கொள்ள ஐந்து தொழில் நெறி வழிகாட்டும் மையங்களுக்கும் அரசாணை நிலை எண் 10, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள் 24.01.2017 வாயிலாக அரசால் ஆண்டொன்றுக்கு ரூ.20.46 இலட்சம் வழங்கப்படுகிறது.

**3. பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம்:**

உதகமண்டலத்தில் செயல்பட்டு வரும் பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையமானது, அரசாணை நிலை எண்80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்04.02.1980 வாயிலாக தொலைதூர இடங்களில் வசிக்கும் பழங்குடியினரிடையே பல்வேறு வாழ்க்கைத்தொழில்கள், உயர்கல்வி வாய்ப்புகள், போட்டித்தேர்வுகள் மற்றும் சுய வேலைவாய்ப்பு போன்றவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இயங்கி வருகிறது. இம்மையத்தின் பணிகளாவன 1. பழங்குடியின மாணவர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டல், 2.தொழில்நெறி வழிகாட்டல் கையேடு வெளியிடுதல் 3.பழங்குடியினர் விடுதிகள் மற்றும் பள்ளிகளில் தொழில்நெறி வழிகாட்டல் சொற்பொழிவுகள் ஆற்றுதல் 4.தனிநபர் வழிகாட்டல் மற்றும் குழு

வழிகாட்டல் வழங்குதல் 5. தனிநபர் தகவல்கள் வழங்குதல் 6. தொலைதூர பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினரிடையே வேலைவாய்ப்புகான பதிவுகளை மேற்கொள்ளுதல்.

**4. மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்:**

மத்திய அரசின் தேசிய தொழில்நெறி பணிகளின் கீழ் அமைந்த பணிப்பயன் முறை திட்டத்தின் (Mission Mode Project)நிதி உதவி மூலம் 2014–ஆம் ஆண்டு தமிழகத்தில் வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரு மாவட்டங்களில் மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்நிறுவப்பட்டுள்ளன. வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் பதிவு செய்துள்ள பதிவுதாரர்கள் மற்றும் பிற வேலைநாடுநர்களுக்கும் அதிகளவில் வேலைவாய்ப்புகளை வழங்குதல் மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் நோக்கத்தோடு மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்கள் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன், தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் பயிற்சியின் வாயிலாக, பயனுள்ள தொழில் நெறி வழிகாட்டும் சேவைகளை வெளிப்படைத்தன்மையுடன் வழங்குகின்றன.

சேலம், இராமநாதபுரம் , திருவள்ளூர், உதகமண்டலம், விழுப்புரம் ,விருதுநகர் மற்றும் மதுரை ஆகிய ஏழு மாவட்டங்களில் மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் தலா 49.50 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் ஏற்படுத்த புதுடெல்லி, மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சரகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**தேசிய தொழில்நெறி பணிவலைதளம்:**

தேசிய தொழில்நெறி பணியின் கீழ் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களும் தேசிய தொழில்நெறி பணி வலைதளத்துடன் (https://www.ncs.gov.in) ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. வேலைநாடுநர்கள், வேலையளிப்பவர்கள் மற்றும் திறன் பயிற்சியளிப்பவர்கள் இவ்விணையதளத்தில் பதிவு செய்துள்ளதால், வேலைநாடுநர்கள் தேசிய அளவிலான பணி வாய்ப்புகளைப் பெற உதவுகிறது. இந்த வலைதளமானது, அரசு, வேலைநாடுநர், வேலையளிப்பவர்கள் மற்றும் திறன் பயிற்சியளிப்பவர்களுக்கு இடையில் உள்ள வேலைவாய்ப்பு இடைவெளியை குறைக்கும் வகையில் பாலமாக செயல்பட்டு வருகிறது.

**6. அயல் நாட்டு வேலைவாய்ப்புக்கு வழிகாட்டல் மற்றும் திறன் பயிற்சிக்கு பதிவு செய்யும் பிரிவுகள் :**

அரசாணை நிலை எண்192, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள் 07.10.2016 வாயிலாக அயல்நாட்டு வேலைவாய்ப்பு மற்றும் திறன் பயிற்சி தேவைப்படும் நபர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தில் அயல் நாட்டு வேலைவாய்ப்புக்கு வழிகாட்டல் மற்றும் திறன் பயிற்சிக்கு பதிவு செய்யும் பிரிவுகள் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் உருவாக்கப்பட்டன. வழிகாட்டல் மற்றும் திறன் பதிவு செய்தல் ஆகிய பணிகள் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலரால் மேற்கொள்ளப்படும்.

## 7. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் :

வளர்ந்து வரும் திறன் பெற்ற பணியாளர்களின் தேவை மற்றும் மாநிலத்தை நாட்டின் திறன் தலைநகரமாக உருவாக்கும் நோக்கம் ஆகியவற்றை பூர்த்தி செய்ய வேண்டி தமிழக அரசால் கம்பெனி சட்டம் 2013, பிரிவு 8–ன்படி இலாப நோக்கமற்ற அமைப்பாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகமானது உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகமானது மாநிலத்தின் திறன் பயிற்சிகளின் ஒருங்கிணைப்பு முகமையாகவும் (Nodal Agency) மற்றும் மாநிலத்தின் திறன் மேம்பாட்டு சூழலின் கிரியாயூக்கியாகவும் செயல்படுவதை நோக்கமாக கொண்டுள்ளது. அரசு நிறுவனங்கள்,சிறந்த தனியார் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தொழில் நிறுவனங்கள் சார்ந்த மற்றும் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சியினை வழங்குகிறது.

### 7.1. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணையதளம்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணையதளமானது (www.tnskill.tn.gov.in) திறன் பயிற்சி தொடர்புடைய அனைவரையும் ஒருங்கிணைக்கும் தளமாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணையதளமானது திறன் பயிற்சி இளைஞர்கள் மற்றும் முக்கிய வேலையளிக்கும் நிறுவனங்கள் பயன் பெறும் வகையில் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்ட திறன் பதிவு தொகுதியாக செயல்படும்.

### 7.2. உயர் திறன் பயிற்சி

பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி பட்டதாரிகளுக்கு உயர் திறன் பயிற்சி வழங்கும் வகையில் ஒரு திறன்மிகு மையம் (Centre of Excellence) மற்றும் ஐந்து தொழில்நுட்ப திறன் பயிற்சி மையங்கள் (t-SDIs), தானியங்கி மற்றும் ரோபோடிக்ஸ் துறையில் உலக அளவில் முன்னணி நிறுவனமான சீமென்ஸ் உடன் இணைந்து பொது மற்றும் தனியார் கூட்டமைப்பாக (PPP) ரூ.546.84 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் ஒரு திறன்மிகு மையம் (Centre of Excellence) சென்னை குரோம்பேட்டை, எம்.ஐ.டி வளாகத்திலும் மற்ற ஐந்து இணைப்பு தொழில்நுட்ப திறன் பயிற்சி மையங்கள் (t-SDIs) பின்வரும் இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

1) அண்ணா பல்கலைக்கழக கல்லூரி, காஞ்சிபுரம்
2) அண்ணா பல்கலைக்கழக கல்லூரி, விழுப்புரம்
3) தந்தை பெரியார் அரசு தொழில்நுட்ப கல்லூரி, வேலூர்
4) மத்திய பாலிடெக்னிக் கல்லூரி, தரமணி
5) முருகப்பா பாலிடெக்னிக் கல்லூரி ( அரசு உதவி பெறும்), ஆவடி

மாணவர்களின் வேலைவாய்ப்பு பெறும் திறனை அதிகரிப்பதற்காக உயர் தொழில்நுட்ப திறன் பயிற்சிகளை வழங்க எம்.ஐ.டி முக்கிய மையமாக செயல்படுவதுடன் தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் பால்டெக்னிக் கல்லூரியை சார்ந்த பயிற்றுநர்களுக்கு திறன் மேம்படுத்தும் பயிற்சி வழங்கும் நிறுவனமாகவும் செயல்படுகிறது.

### 7.3. அனுபவத்தின் மூலம் பெற்ற திறமையை அங்கீகரித்தல் – திறன் மதிப்பீடு மற்றும் சான்றளித்தல் (Recognition of Prior Learning-RPL)

அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல் என்பது ஒரு நபரிடம் காணப்படும் திறன்கள், அறிவு மற்றும் முறையான / முறைசாரா கற்றலின் வழி அவர்பெற்ற அனுபவம் ஆகியவற்றை சோதித்து சான்றளிப்பதாகும். இத்திட்டத்தின் மூலம் கீழ்கண்ட துறைகளில் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் சான்றிதழ் வழங்கப்படுகிறது .

1) கட்டுமானம்
2) ஆடை வடிவமைத்தல்
3) வண்ணம் மற்றும் வண்ணப்பூச்சு
4) தோல் மற்றும் தோல்பொருட்கள்
5) சரக்கு நகர்வு மேலாண்மை
6) தானியங்கி
7) சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்
8) வீடு சார்ந்த பணிகள்

மேலும் பொதுப் பணித்துறை, குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், உள்ளாட்சி அமைப்புகள் போன்றவற்றில் மேற்கொள்ளப்படும் கட்டுமான ஒப்பந்த பணிகளில் பணியின் தரம் மற்றும் பணியிடங்களில் விபத்துக்களைக் குறைக்கும் பொருட்டு, அனுபவத்தின் மூலம் பெற்ற திறமையை அங்கீகரித்து சான்றிதழ் பெற்ற தொழிலாளர்களை பணி அமர்த்திட வேண்டுமென மாநில அரசு ஆணையிட்டுள்ளது.